கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர் கனமழை: 14 வீடுகள் இடிந்து சேதம்

நாகர்கோவில், மே 24: கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 நாள்களாக தொடர்ந்து பெய்துவரும் கன மழையால் 14 வீடுகள் இடிந்துள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டம் முழுவதும் தொடர்ந்து மழை நீடித்து வந்த நிலையில், வெள்ளிக்கிழமை பல பகுதிகளில் கன மழை பெய்தது. அதிக பட்சமாக பேச்சிப்பாறை அணை பகுதியில் 75.80 மில்லிமீட்டர் மழை பதிவானது.

நாகர்கோவில் புத்தேரி பெரியகுளம் நிரம்பியதால் அருகில் இருக்கும் வீடுகளுக்குள் தண்ணீர் செல்லாமல் இருக்க மறுகால் வழியாக மழை வெள்ளத்தை வெளியேற்றுவது குறித்து மாநகராட்சி உறுப்பினர் ஸ்ரீலிஜா நேரில் சென்று பார்வையிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளங்களில் தற்போது 100 க்கும் மேற்பட்ட குளங்கள் முழுக்கொள்ளளவை எட்டியுள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஏற்கெனவே, 12 வீடுகள் இடிந்து விழுந்திருந்த நிலையில், வியாழக்கிழமை ஒரே நாளில் 14 வீடுகள் இடிந்துள்ளன. தோவாளை, செண்பகராமன்புதூர் பகுதியில் செங்கல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

மேயர் ஆய்வு: நாகர்கோவில் கோட்டாறு இடலாக்குடி சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம் முன்பு தேசிய நெடுஞ்சாலையில் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட பகுதியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் பார்வையிட்டு தேசிய நெடுஞ்சாலை துறையினரிடம் உடனே சீரமைக்குமாறு கேட்டு கொண்டார்.

உபரிநீர் திறப்பு அதிகரிப்பு: கன மழையால் பேச்சிப்பாறை அணைக்கு 2344 கன அடி நீர்வரத்து உள்ளது. விநாடிக்கு 500 கன அடி உபரிநீர் வெளியேற்றப்பட்டு வந்த நிலையில் வெள்ளிக்கிழமை 1,250 கன அடியாக உயர்த்தப்பட்டது. சிற்றாறு 1 அணைக்கு விநாடிக்கு 289 கன அடியும், சிற்றாறு 2 அணைக்கு விநாடிக்கு 426 கன அடியும் நீர்வரத்து உள்ளது. பெருஞ்சாணி அணைக்கு நீர்வரத்து 1,409 கன அடியாக உள்ளது.

பேச்சிப்பாறை அணையிலிருந்து உபரித் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வரும் நிலையில் குழித்துறை தாமிரவருணியாற்றில் வெள்ளம் கரைபுரண்டு பாய்கிறது. குறிப்பாக ஆற்றின் தடுப்பணைகள், தரைப்பாலங்களை மூழ்கடித்தவாறு வெள்ளம் பாய்கிறது.

அருவியில் வெள்ளம்: திற்பரப்பு அருவியில் தொடர்ந்து வெள்ளப் பெருக்கு நீடிப்பதால் சுற்றுலாப்பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அருவிப் பகுதியில் தற்காலிக வேலி அமைக்கப்பட்டுள்ளது.

தொழில்கள் பாதிப்பு: மாவட்டத்தில் மழை தொடர்ந்து பெய்து வருவதால் ரப்பர், செங்கல்,கட்டுமானம் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் முடங்கியுள்ளன.இதனால் தொழிலாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். கல்விக் கூடங்கள் திறக்கவிருக்கும் நிலையில், கல்விக் கட்டணங்கள் செலுத்த முடியாமல் பெற்றோர்கள் அவதிப்படும் நிலையும் உருவாகியுள்ளது.

நாகர்கோவில் இடலாக்குடி பகுதியில் மழையால் சேதமடைந்த சாலையை ஆய்வு மேற்கொள்கிறார் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ். (வலது) திற்பரப்பு அருவியில் பெருக்கெடுத்துப் பாயும் வெள்ளம்

வாக்கு எண்ணிக்கை: அலுவலர்களுக்கு பணி ஒதுக்கீடு

வாக்கு எண்ணிக்கையில் ஈடுபட உள்ள கண்காணிப்பாளர், உதவியாளர்கள் மற்றும் நுண்பார்வையாளர்களுக்கு குலுக்கல் முறையில் பணி ஒதுக்கீடு செய்கிறார் மாவட்ட ஆட்சியர் பி.என். ஸ்ரீதர்.

நாகர்கோவில், மே 24: கன்னியாகுமரி மக்களவை பொதுத்தேர்தல் மற்றும் விளவங்கோடு சட்டப்பேரவை இடைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை மைய கண்காணிப்பாளர், உதவியாளர்கள் மற்றும் நுண்பார்வையாளர்களுக்கான முதல் கட்ட பணியை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் பி.என். ஸ்ரீதர், வெள்ளிக்கிழமை குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்து, பயிற்சி வகுப்பை தொடங்கி வைத்தார்.

கூட்டத்தில், ஆட்சியரின் நேர்முகஉதவியாளர் (தேர்தல்) செந்தூர்ராஜன்,முன்னோடி வங்கி மேலாளர் பிரவின்குமார், கூடுதல் உதவி தேர்தல் அலுவலர் செந்தில்வேல்முருகன், தனி வட்டாட்சியர் (தேர்தல்) வினோத், கண்காணிப்பாளர், உதவியாளர்கள் மற்றும் நுண்பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

வேன், லாரி கண்ணாடிகள் சேதம்: ஒருவர் கைது

கோவில்பட்டி/சாத்தான்குளம், மே 24: கயத்தாறு அருகே வேன், லாரி கண்ணாடிகளை சேதப்படுத்தியதாக ஒருவரை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

கயத்தாறு அருகே காப்புலிங்கம் பட்டியில் உள்ள 3 கிராம சர்வே எண்ணில் காற்றாலை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகளை கண்காணிப்பதற்கு 2 காவலர்களையும் காற்றாலை நிறுவனத்தினர் நியமித்துள்ளனர். இந்நிலையில், புதன்கிழமை அங்கு வந்த 2 பேர் காவலர்களை அவதூறாகப் பேசி அங்கு நின்றிருந்த வேன் மற்றும் லாரி கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தினராம். இதை தடுக்க சென்ற காவலர்களை அவதூறாகப் பேசி, கொலை மிரட்டல் விடுத்து விட்டு தப்பினராம்.

இதுகுறித்து காற்றாலை நிறுவனத்தில் 'செக்யூரிட்டி சர்வீஸ்' நிறுவன மேலாளர் தங்கப்பாண்டியன் அளித்த புகாரின் பேரில் கயத்தாறு போலீஸார் வெள்ளிக்கிழமை வழக்குப்பதிந்து, இதில் தொடர்புடையதாக கூறப்படும் அதே பகுதி தெற்குத் தெருவை சேர்ந்த ராமராஜன் மகன் மகாராஜனை (38) கைது செய்தனர்; கிருஷ்ணசாமி என்பவரை தேடி வருகின்றனர்.

எல்இடி விளக்கு சேதம்: சாத்தான்குளம் அருகே தேர்க்கன்குளம் அம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த இசக்கி மகன் பேச்சிமுத்து(46) விவசாயி. அப்பகுதியில் உள்ள இவரது இடத்தை கோயிலுக்கு தானமாக வழங்குமாறு கேட்டதற்கு மறுத்துவிட்டாராம்.

இந்நிலையில், கடந்த 19ஆம் தேதி அவக் வெளியூர் சென்றிருந்த நிலையில், வசப்பனேரியைச் சேர்ந்த ராமையா மகன் ஜெபமணி என்பவர், பேச்சிமுத்துவுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள எல்இடி விளக்கை உடைத்து சேதப்படுத்தினாராம். இதுகுறித்த புகாரின் பேரில் சாத்தான்குளம் காவல் உதவி ஆய்வாளர் எட்வின் அருள்ராஜ் வழக்குப்பதிந்து விசாரிக்கிறார்.

தேர்வில் 100 சதவீத தேர்ச்சி பெற்ற அரசு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு

10ஆம் வகுப்பு, பிளஸ் 2 தேர்வுகளில் 100 சதவீத தேர்ச்சி பெற்ற அரசு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுடன் மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி உள்ளிட்டோர்.

தூத்துக்குடி, மே 24: தூத்துக்குடி மாவட்டத்தில் 2023-24 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 13 அரசு பள்ளிகளும், 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 30 அரசு பள்ளிகளும் 100 சதவீத தேர்ச்சி பெற்றன. இதற்கான பாராட்டு விழா, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி தலைமை வகித்து, 100 சதவீத தேர்ச்சி பெற்ற அரசு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார். குறிப்பாக, வேப்பலோடை அரசு மேல்நிலைப் பள்ளியின் 10 ஆம் வகுப்பு, பிளஸ் 1, பிளஸ் 2 மாணவர்கள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றனர். இதையடுத்து, அப்பள்ளியின் ஆசிரியர்கள், தலைமையாசிரியர் சேகர், இராமானுஜம்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் சமூக அறிவியல் பாடத்தில் தனது தனித்துவமான பாடக்குறிப்புகள் மூலம் சிறப்பாக கல்வி கற்பித்த ஆசிரியர் ஜெயராமன் ஆகியோருக்கு சிறப்பு பாராட்டு அளிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி பேசுகையில், மாணவர்களின் தனித்திறமையை வெளிக் கொணர்வதற்கான அனைத்து வாய்ப்புகளையும் ஆசிரியர்கள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரெஜினி, மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் பங்கேற்றனர்.

குமரி அதிவிரைவு ரயிலை பெங்களூரு மாற்று ரயிலாக இயக்கக் கூடாது

எம்எல்ஏ வலியுறுத்தல்

நாகர்கோவில், மே 24: கன்னியாகுமரி அதிவிரைவு ரயிலை பெங்களூருவுக்கு மாற்று ரயிலாக இயக்கக் கூடாது என்று என். தளவாய் சுந்தரம் எம்எல்ஏ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தென்னக ரயில்வே பொதுமேலாளருக்கு அனுப்பியுள்ள கடிதம்: கன்னியாகுமரி அதிவிரைவு ரயில் கன்னியாகுமரியிலிருந்து தினமும் மாலை 5.50 மணிக்கு புறப்பட்டு நாகர்கோவில் வழியாக சென்னைக்கு மறுநாள் காலை 6.30 மணிக்கு சென்றடைகிறது. மறுமார்க்கத்தில் சென்னையிலிருந்து மாலை5 .20 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 4.55 மணிக்கு நாகர்கோவில் வருகிறது.

இந்நிலையில், இந்த ரயிலை, கன்னியாகுமரி - பெங்களூரு விரைவு ரயிலாக மாற்றி வெள்ளிக்கிழமை குமரியிலிருந்து காலை 10.10 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 6.40 மணிக்கு பெங்களூருக்கு சென்று வருகிறது. இதே போல் மறுமார்க்கத்தில் இந்த ரயில் பெங்களூரிலிருந்து இரவு 8.10 மணிக்கு புறப்பட்டு மறுநாள் பிற்பகல் 2.50 மணிக்கு கன்னியாகுமரிக்கு வருகிறது. சில நேரங்களில் இந்த ரயில் காலதாமதமாக வருகிறது.

இந்த ரயிலினை சுத்தம் செய்வதற்கு போதுமானநேரம் இல்லாததால் எந்த வித தூய்மைப் பணியும் மேற்கொள்ளாமல், இருக்கைகள், படுக்கைகள் சுத்தம் செய்யப்படாமல் சென்னைக்கு புறப்பட்டு செல்கிறது. கன்னியாகுமரி அதிவிரைவு ரயில் கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கும் மட்டுமே இயக்கப்பட வேண்டும். இதனை வேறு மார்க்கத்துக்கு மாற்றிவிட அனுமதிக்கக் கூடாது.

மேலும், முன்பு கன்னியாகுமரி அதிவிரைவு ரயிலில், படுக்கை வதிகளுடன் கூடிய பெட்டிகள் 12 இருந்தன. தற்போது அதில் 5 பெட்டிகள் குறைக்கப்பட்டு 7 பெட்டிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. இதனால் தினமும் சுமார் 400 பயணிகள் சென்னைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, முன்பு இருந்தது போல இந்த ரயிலில் 12 பெட்டிகளாக தொடர வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வணிகர்கள் பாதுகாப்பு நலச் சட்டம்: முதல்வருக்கு கோரிக்கை

திருச்செந்தூர், மே 24: வணிகர்கள் பாதுகாப்பு நலச் சட்டம் இயற்றி வணிகர்களை பாதுகாக்க வேண்டும் என தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு வணிகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழ்நாடு வணிகர் சங்கம், தூத்துக்குடி மாநில தலைவர் ரெ.காமராசு அனுப்பியுள்ள மனு: திருச்செந்தூரில் கடந்த மே 5ஆம் தேதி தமிழ்நாடு வணிகர் சங்க மாநில மாநாடு நடந்தது.

இதில் சென்னையில் மாமூல் தராத மருந்து வணிகர் கொல்லப்பட்டதை கண்டித்தும், வணிகர்களுக்கு மருத்துவரை போல வணிகர் பாதுகாப்பு நலச்சட்டம் இயற்ற வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் மே 6ஆம் தேதி ஆறுமுகனேரி ஐக்கிய வியாபாரிகள் சங்கத் தலைவர் தாமோதரன்- அவரது மகன் மீது இரவு 10 மணிக்கு கடைக்குள்ளேயே மூன்று ரௌடிகள் இரும்பு ராடால் கொலைவெறி தாக்குதல் நடத்தியுள்ளனர். வியாபார சங்கத் தலைவருக்கே பாதுகாப்பு இல்லை. இதுபோல் கடந்த மே 20ஆம் தேதி தூத்துக்குடி வ.உ.சி. மார்க்கெட்டில் ஐக்கிய வியாபாரிகள் சங்கத்தைச் சார்ந்த மளிகை கடையில் பணம் கொடுக்காமல் பொருள்களை அள்ளிச்சென்ற ரௌடிகளை தட்டிக்கேட்ட எதிர் கடைக்காரர் வீச்சரிவாளால் தலையில் வெட்டப்பட்டார். இவ்வாறு வணிகர்கள் தாக்கப்படும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. எனவே, வணிகர்களை ரௌடிகளிடமிருந்து பாதுகாக்க வணிகர்கள் பாதுகாப்பு நலச்சட்டத்தை முதல்வர் இயற்றி வணிகர்களை அச்ச உணர்வின்றி வணிகம்செய்ய உதவ வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

லஞ்சப் புகார்களுக்கு தொலைபேசி எண்கள் வெளியீடு

தூத்துக்குடி, மே 24: தூத்துக்குடி மாவட்டத்தில் லஞ்சம் தொடர்பான புகார்களை தெரிவிக்க கைப்பேசி, தொலைபேசி எண்களை மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறை டிஎஸ்பி பீட்டர் பால்துரை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலகங்களில் பொதுமக்கள் கொடுக்கும் மனுக்கள் அல்லது கோரிக்கைகள் சம்பந்தமாக அரசு அலுவலர்கள் லஞ்சம் கேட்டால், மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறையில் நேரடியாகவோ அல்லது கைப்பேசி, தொலைபேசி வாயிலாகவோ புகார் தெரிவிக்கலாம். லஞ்சம் தொடர்பான புகார்களை தூத்துக்குடி மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறை டிஎஸ்பியை 89257 31968 என்ற கைப்பேசி எண், 9442364144 என்ற வாட்ஸ்ஆப் எண்ணிலும், காவல் ஆய்வாளர்களை 82204 99972, 94981 95826 ஆகிய எண்களிலும், மேலும் 0461-2271143 என்ற தொலைபேசி எண்ணிலும் தெரிவிக்கலாம். தகவல் கொடுப்பவர்களின் பெயர், விவரம் ரகசியமாக வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆறுமுகனேரி டிஎம்பி வங்கியில் கிழிந்த ரூபாய் நோட்டுகள் மாற்றும் முகாம்

ஆறுமுகனேரி, மே 24: ஆறுமுகனேரியில் டிஎம்பி வங்கி மற்றும் பாரத ரிசர்வ் வங்கி இணைந்து, பழைய கிழிந்த ரூபாய் நோட்டுகள் மாற்றும் முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஆறுமுகனேரி டிஎம்பி கிளை மேலாளர் சரவணன் தலைமை வகித்து முகாமை துவக்கி வைத்தார். இதில் ஆறுமுகனேரி, காயல்பட்டினம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் வங்கி வாடிக்கையாளர்கள் ஏராளமானோர் பங்கேற்று, கிழிந்த மற்றும் அழுக்கடைந்த ரூபாய் நோட்டுகள் மற்றும் சேதமடைந்த நாணயங்களை அளித்து, அதே மதிப்பில் புதிய ரூபாய் நோட்டுகளை பெற்றுச் சென்றனர்.

மார்த்தாண்டம் அருகே பைக் திருட்டு: சிறுவர்கள் கைது

களியக்காவிளை, மே 24: மார்த்தாண்டம் அருகே பைக்கை திருடியதாக இரு சிறுவர்களை போலீஸார் கைது செய்தனர்.

தக்கலை அருகேயுள்ள காட்டாத்துறையைச் சேர்ந்தவர் ஜினோ (24). மார்த்தாண்டம் பம்மம் பகுதியிலுள்ள நிறுவனத்தில் விற்பனையாளராக வேலை செய்து வருகிறார். இவர், அந்நிறுவனத்தின் முன் நிறுத்தியிருந்த பைக்கை மர்மநபர்கள் திருடிச்சென்றுவிட்டனராம். இது குறித்து அவர் அளித்த புகாரின் பேரில் மார்த்தாண்டம் போலீஸார் வழக்குப் பதிந்து, கண்காணிப்பு கேமரா காட்சிகளை கைப்பற்றி விசாரித்தனர். அதில், கீழ்குளம், பறக்கின்விளை பகுதியைச் சேர்ந்த17 வயது சிறுவன், திக்கணங்கோடு, தாறாவிளையைச் சேர்ந்த 16 வயது சிறுவன் ஆகியோருக்கு தொடர்பிருப்பது தெரியவந்தது. அவர்களை வியாழக்கிழமை இரவு போலீஸார் கைது செய்து, பைக்கை மீட்டனர். வீட்டில் பைக் வாங்கித் தராததால் திருட்டில் ஈடுபட்டதாக போலீஸாரிடம் இருவரும் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை		ஞாயிற்றுக்கிழமை
சூரிய அஸ்தமனம், மாலை 6.32		சூரிய உதயம், காலை 6.00

SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. Ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO/SAR/SN/24/2024-25 தேதி: 24.05.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ், M/s. பவானி டிரேடர்ஸ் உரிமையாளர், 8/70-1, S.M. பில்டிங், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 4-50, ஜோஸ் இல்லம், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 17-242, SM காம்ப்ளக்ஸ், முட்டைக்காடு, குமாரபுரம் P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629164.
2) திரு. S.M. காட்வின் ஜோஸ், ஜனா இல்லம், 4/71-1, பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
3) திருமதி. ஜோஸினா பவானி எட்வின் ஜோஸ் @ ஜோஸினா, 24-15, மேடவிளை, முட்டைக்காடு, குமாரபுரம், கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 4-50, ஜோஸ் இல்லம், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
4) திரு. செல்வராஜ் முத்தையன், மேக்கோடு, பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 4-50, ஜோஸ் இல்லம், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.

தி சௌத் இந்தியன் வங்கி கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையான சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 23.05.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், தக்கலை கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.3,19,37,197.20 (ரூபாய் மூன்று கோடியே பத்தொன்பது லட்சத்து முப்பத்தேழாயிரத்து நூற்றி தொன்னூற்றி ஏழு மற்றும் பைசா இருபது மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 08.07.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர்/உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்:	ஷட்டம் எண்.1: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் ஷட்டம் எண்.2: திரு. காட்வின் ஜோஸ் ஷட்டம் எண்.3: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் ஷட்டம் எண்.4: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ்

சொத்து விபரம்:- **ஷட்டம் எண்.1:** கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, குமாரபுரம் (கோத்தநல்லூர்) கிராமம், ரீசர்வே எண்.533/4A-ல் அமைந்துள்ளதும், குமாரபுரம் ஸ்பெஷல் கிரேடு பஞ்சாயத்தில் சுமார் 1439 சதுரடி மொத்த கட்டுமானப் பரப்பில் கதவு எண். 17/239, 240, 241, 242, 242/1 ஆகியவற்றைக் கொண்ட கட்டடத்துடன் கூடிய 1.50 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, வேர்கிளம்பி சார்பதிவகத்தில் 29.03.2006 அன்று பதிவு பெற்ற விற்பனைப் பத்திர எண்.926/2006-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: சந்திரசேகரன் நாயருடைய சொத்து. தெற்கே: செல்லையனுடைய சொத்து. கிழக்கே: சரோஜம் சொத்து. மேற்கே: ரோடு.

ஷட்டம் எண்.2: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, மேக்கோடு கிராமம், ரீசர்வே எண்.545/12A-ல் அமைந்துள்ளதும், வேர்கிளம்பி நகர பஞ்சாயத்தில் சுமார் 1092 சதுரடி கட்டுமானப் பரப்பில் கதவு எண். 4-71/1-ஆ கொண்ட கட்டடத்துடன் கூடிய 17.50 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. காட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, வேர்கிளம்பி சார்பதிவகத்தில் 17.01.2005 அன்று பதிவு பெற்ற செட்டில்மெண்ட் பத்திர எண்.108/2005-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: ரோடு. தெற்கே: வின்சென்ட்-ன் சொத்து. கிழக்கே: ஜஸ்டின் ஜோஸுடைய சொத்து. மேற்கே: பொன்னையனுடைய சொத்து.

ஷட்டம் எண்.3: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, மேக்கோடு கிராமம், பழைய சர்வே எண்.1831, ரீசர்வே எண்.543/16-ல் அமைந்துள்ளதும், வேர்கிளம்பி பஞ்சாயத்தில் சுமார் 2905 சதுரடி அஸ்திவாரப் பரப்பில் கதவு எண். 4/50-ஆ கொண்ட கட்டுமான பணியிலிருக்கும் கட்டடத்துடன் கூடிய 8.50 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, வேர்கிளம்பி சார்பதிவகத்தில் 29.01.2018 அன்று பதிவு பெற்ற செட்டில்மெண்ட் பத்திர எண்.243/2018-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: அய்யாங்கண் & செல்வராஜ் ஆகியோரின் சொத்து. தெற்கே: ரோடு. கிழக்கே: மோகன்தாஸுடைய சொத்து. மேற்கே: கோவில் சொத்து.

ஷட்டம் எண்.4: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, மேக்கோடு கிராமம், பழைய சர்வே எண்.1821 ரீசர்வே எண்.545/12A-ல் அமைந்துள்ளதும், வேர்கிளம்பி நகர பஞ்சாயத்தில் சுமார் 1100 சதுரடி கட்டுமானப் பரப்பில் கதவு எண். 8/70/1-ஆ கொண்ட கட்டடத்துடன் கூடிய 5 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. 10 சென்ட் இடத்தில் ஒரு பகுதியை விற்ற பிறகு வழங்கப்பட்ட இடமாகும். இது வேர்கிளம்பி சார்பதிவகத்தில் 17.01.2005 அன்று பதிவு பெற்ற செட்டில்மெண்ட் பத்திர எண்.107/2005-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட பகுதியின் எல்லைகள்: வடக்கே: அனிக்கு விற்கப்பட்ட சொத்து. தெற்கே: முருகேசனுடைய சொத்து. கிழக்கே: ரோடு. மேற்கே: ஜஸ்டின் ஜோஸுடைய சொத்து.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ஷட்டம் எண்.1: ரூ.31,96,000/- (ரூபாய் முப்பத்தொரு லட்சத்து தொன்னூற்றி ஆறாயிரம் மட்டும்) ஷட்டம் எண்.2: ரூ.69,66,000/- (ரூபாய் அறுபத்தொன்பது லட்சத்து அறுபத்தாறாயிரம் மட்டும்) ஷட்டம் எண்.3: ரூ.93,28,000/- (ரூபாய் தொன்னூற்றி மூன்று லட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) ஷட்டம் எண்.4: ரூ.29,01,000/- (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து ஒராயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	ஷட்டம் எண்.1: ரூ.3,19,600/- (ரூபாய் மூன்று லட்சத்து பத்தொன்பதாயிரத்து அறுநூறு மட்டும்) ஷட்டம் எண்.2: ரூ.6,96,600/- (ரூபாய் ஆறு லட்சத்து தொன்னூற்றி ஆறாயிரத்து அறுநூறு மட்டும்) ஷட்டம் எண்.3: ரூ.9,32,800/- (ரூபாய் ஒன்பது லட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) ஷட்டம் எண்.4: ரூ.2,90,100/- (ரூபாய் இரண்டு லட்சத்து தொன்னூறாயிரத்து நூறு மட்டும்)
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	08.07.2024, 02.00 PM முதல் 03.00 PM வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற தன்நீட்சியுடன்)
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	ஷட்டம் எண்.1: 01.04.2015 முதல் 25.04.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. ஷட்டம் எண்.2: 01.01.2004 முதல் 11.05.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. ஷட்டம் எண்.3: 01.04.2010 முதல் 27.04.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. ஷட்டம் எண்.4: 01.01.2004 முதல் 11.05.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட் (Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல